
# காஞ்சி

ஆசிரியர்

அண்ணாதுரை

10-7-66

விலை 20 காசு



பெட்ரண்டு ரஸ்ஸல்

# கேள்வி--பதில்!

(1) **இந்திராகாந்தியின் தமிழ்நாட்டுச் சுற்றுப் பயணத்தின் போது கம்யூனிஸ்டுகள் கைது செய்யப்பட்டது எதைக் குறிக்கிறது?**

அமெரிக்கத் தூதர் செஸ்டர் பௌல்சை அறிவீர்கள் இல்லையா? அவர் ஒரு நூலில் எழுதியுள்ளார், **ஜார் மன்னனை எதிர்த்த குற்றத்துக்காக ஸ்டாலின் ஒரேஒரு முறைதான் நாடு கடத்தப்பட்டார்; ஆனால், ஸ்டாலினை எதிர்த்தவர்களில் எத்தனைப்பேர் உயிருடன் தப்பினார்கள்?** என்று! இது ஆட்சியின் வேறுபாட்டை மட்டுமல்லாமல், மனித இயல்பின் தன்மையையும் கணித்துப்பார்க்கும் ஒரு வினாவாகும். **ஜனநாயகம் இந்தியாவில் செத்துவிட்டது என்றும், காங்கிரசை வீழ்த்தி, ஆட்சியினின்றும் அகற்றினாலல்லாமல், ஜனநாயகத்தைக் காப்பாற்ற முடியாது என்றும்** நாம் கூறும்போது, வக்காலத்து வாங்குபவர்கள், 'ஜனநாயக ரீதியாக எதிர்ப்பைத் தெரிவிக்கும் ஒரு முறைமை இப்படி கண்மண் தெரியாமல் 'கைது' செய்யும் அளவில் வந்து நிற்பது ஏன் என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்பதைக் குறிக்கிறது!

(2) **நான் மாநாட்டுத் தொண்டனாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறேன்; என் கடமையென்ன என்று விளக்குகிறீர்களா?**

தொண்டர் படைத் தலைவர் இதனை உங்களுக்கு நன்கு விளக்குவார். பொதுவாக தொண்டர்களாகப் பணியாற்றும் பொறுப்பேற்பவர்களுக்கு நிகழ்ச்சிகளைக் கவனிக்கும் விருப்பம் எழுவது இயற்கைதானென்றாலும், அந்நிகழ்ச்சிகளைக் கவனிப்பதற்கென்றே வருகிறவர்களுக்கு வேண்டிய வசதிகளைக் கவனிப்பதில்தான் முழுக் கவனமும் இருக்கவேண்டும். தங்கள் 'ஆசை'களைச் சற்றே ஒதுக்கி வைத்துவிட்டுப்பொதுப்பணியில் ஈடுபட முனைந்தால், வருகிறவர்களுக்கும் சௌகரியமாக இருக்கும்; மாநாடு நடத்துவோருக்கும் நல்ல பெயர் கிடைக்கும். படைத் தலைவரின் கட்டளைப்படியும், அவ்வப்போதைய சூழ்நிலைக்கும் ஏற்றபடி ஒரு ஒழுங்குமுறையை வகுத்துக்கொண்டு கட்டுப்பாட்டோடு தங்கள் கடமையில் ஈடுபடுவதுதான் வரவேற்கத்தக்கது. எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்குப் பயிற்சி பெற்றுக்கொண்டால்கூட நல்லது.

(3) **மத்திய அமைச்சர்கள் சுப்பிரமணியம், அசோக்மேதா ஆகியவர்கள் மீது கட்சிக் கூட்டத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப் போகிறார்களாமே சில காங்கிரஸ் மெம்பர்கள்?**

ஆமாம்! அப்படித்தான் இதழ்கள் கூறுகின்றன. நேபாமுனைப் பாதுகாப்புத் தொடர்பாக கிருஷ்ணமேனன் மீது மட்டும் நம்பிக்கை இல்லை என்று கூற முடியும்போது நேருவின் சோஷலிசக் கொள்கைக்கு பங்கமும், பாதகமும் விளைவித்துவிட்ட இவர்கள் மீது ஏன் 'நம்பிக்கையின்மை'யை கட்சி ஆராயக் கூடாது என்று கேட்கிறார்கள். இந்த இருவரும் இந்தியாவின் பொருளாதார அடிமைத்தனத்திற்கும், அரசியல் அடிமைத்தனத்துக்கும் கால்கோலி விட்டார்கள் என்பது அவர்கள் குற்றச்சாட்டு! நியாயம்தானே இது!

(4) **தமிழ்நாட்டு விஜயத்தின் போது, தமிழக மக்களுக்கு இந்திரா விடுத்த செய்தி என்ன?**

சோறு சாப்பிடுவதை நிறுத்திக்கொள்ளுங்கள் — என்று அல்ல, குறைத்துக்கொள்ளுங்கள் என்றுதான் சொல்லிச் சென்றார்!

(5) **உலகம் முழுவதுமே அரிசிப் பற்றாக்குறை என்று இந்திராகாந்தி கூறுவது சரியா?**

இந்தியப் பிரதமர்தானே இப்படிக் கூறி இருக்கிறார்! அமெரிக்காவிலிருந்தும், ரஷ்யாவிலிருந்தும், பிரிட்டனிலிருந்தும் இன்னபிற உலகத்துச் சின்னஞ் சிறு நாடுகளிலிருந்தெல்லாம் இந்தியாவை நோக்கி **'உதவிகள்'** விரைகின்றபோது வேறெப்படி இருக்குமாம்!

(6) **இந்தியப் பிரதமரின் சென்னைப் பேச்சில் 'நாம் பின்பற்றி வந்துள்ள கொள்கைகள் சரியானவைதான் என்பது நிரூபணமாகிவிட்டது' என்றார். எனக்கு இது புரியவில்லையே!**

புரியவில்லையா! போன மாதம் புளி என்ன விலைக்கு வாங்கினீர்கள்? பருப்பு என்ன விலைக்கு வாங்கினீர்கள்? நல்லெண்ணெய், மண்ணெண்ணெய், அரிசி, காய்கறி முதலானவைகள் என்ன விலைக்கு வாங்கினீர்கள்? நினைவுபடுத்திப் பாருங்கள். இப்போது என்ன விலைக்கு வாங்குகிறீர்கள்? தொடர்புபடுத்திப் பாருங்கள்!! ரூபாயின் வெளிநாட்டு மதிப்புக் குறைக்கப்பட்டதன் காரணம் என்ன என்று கூறுகிறார்கள்? ஒப்பிட்டுப் பாருங்கள். பளிச்சென்று புரியும்!

(7) **நாட்டில் இப்போது ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் அனைத்தும் 'தற்காலிகமான'வைதான் என்கிறார் இந்திராகாந்தி! நீர் என்ன சொல்கிறீர்?**

**"தற்காலிகமான" என்பதற்குப் 'பத்தொன்பது ஆண்டுகள்'** என்பதுதான் பொருளோவென நினைக்கிறேன்!

(8) **தென் வியட்நாம் போர் வட வியட்நாம் வரையிலா விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது?**

யார் சொன்னார்கள் அப்படி? வட வியட்நாம் தலை நகரத்தின் பக்கம்தானே குண்டுமாரி பொழியப்பட்டது என்று ஜான்சனே பதில் சொல்லிவிட்டாரே, கவனிக்கவில்லையா நீர்?

(9) **பாகிஸ்தானுக்கு ரஷ்யா ஆயுத உதவி செய்யும் என்ற செய்தி மறுக்கப்பட்டுவிட்டதைப் பார்த்தீர்களா!**

பார்த்தேன், பார்த்தேன்! அதே இதழின் இன்னொரு பக்கத்தில், இந்திரா அம்மையார் அவர்கள் 'லுக்' இதழில் 'நேருவின் சோஷலிசக் கொள்கையையும் மாற்றிக் கொள்வேன் என்று கூறவில்லை' என அறிவித்துள்ள செய்தியை நீர் கவனித்தீரா? மொத்தத்தில் இப்போதெல்லாம் இதழ்களில் வருகிற எந்தச் செய்தியை நம்புவது? எதனை நம்பாதிருப்பது என்பதைக் கண்டு பிடிப்பதே கஷ்டமாக இருக்கிறது!

**கண்ணீர்ப் படை!**

கொடுங்கோன்மையின் வெம்மையைத் தாங்க முடியாது, துயர்ப்பட்டு வடிக்கின்ற ஏழையாது கண்ணீர்தான் ஆளவுந்தாரது அகந்தையை உடைத்தெறியும் படையாகும்.

—திருவள்ளுவர்.


# காஞ்சி

மலர் 2 | 10—7—66 | இதழ் 50


# 'ஜனநாயகக் கொலை'

நெல்லை நகராட்சி மன்றத்தைக் கலைத்துவிட்டது தமிழக அரசு.

பொதுத்தொண்டிலும் கழகப் பணியிலும் தம்மை இளமைப் பருவத்திலேயே ஈடுபடுத்திக் கொண்டு, நெல்லை நகரத்து நல்லோர்களின் நன்மதிப்பைப் பெறத்தக்க முறையில் நகராட்சியை நடத்திச் சென்ற நண்பர் **மஜீத்**, நெல்லை நகராட்சியின் தலைவராக இருப்பதைத் தாங்கிக்கொள்ள முடியாதவர்களின் விருப்பத்தைத் தமிழக அரசு நிறைவேற்றிக் கொடுத்துவிட்டது.

வீரமிக்கது என்றோ விருது பெறத்தக்கது என்றோ இதனை எவரும் கூறிடார்; மூட்டிவிட்டவர்கள் தவிர. இதனை ஜனநாயகக் கொலை என்றும் எதேச்சாதிகாரப்போக்கு என்றும் மூதறிஞர் ராஜாஜி கூறியிருப்பது, நாட்டின் நல்லறிவாளர் அனைவரும் கொண்டுள்ள கருத்தாகும்.

நண்பர் **மஜீத்**, நகராட்சி மன்றத் தலைவராக வீற்றிருப்பது, அந்தப் பகுதியில் கழகத்துக்கு ஒரு புதிய ஏற்றத்தையும் வலிவு பொலிவையும் தருகிறது என்பதனை அறிந்த அழுக்கு மனத்தினர், ஆகா வழிகளில் சென்றும் பதவியினின்றும் அவரை வீழ்த்திட முனைந்தனர்; அமளி மூட்டி அகமகிழ்ந்தனர்.

இளைஞர், உணர்ச்சி வயப்படக் கூடியவர். ஆகவே அவருடைய நிர்வாகத்தைக் குந்தகப்படுத்த முயன்றால் சீறிப் பாய்வர், வீழ்ந்துபடுவர் என்று எண்ணினர், கட்சிமாச்சரியம் கொண்டோர்.

நண்பர் **மஜீத்** மிக்க பொறுப்புடனும், பொறுமை உணர்ச்சியுடனும் நடந்துகொண்டு வந்தார்; எதிர்ப்பாளர்களையும் அணைத்துச் சென்றிட முனைந்தார்; அதன் மூலம் தமது கண்ணியத்தை நாடு உணரும்படிச் செய்தார். கழகத் தோழர்கள் பெருமைப்படும் விதமாக ஆட்சி நடாத்தி வந்தார்.

கட்சி பேதமின்றி, எல்லோருடைய நல்லெண்ணத்தையும் நட்புணர்ச்சியையும் பெற்று, நெல்லை நகருக்கு பலவிதமான ஏற்றம், எழில், வசதி, பெருக்கிட வேண்டுமென எண்ணினார்; அந்த இளைஞர் கொண்டிருந்த எண்ணத்தை நிறைவேற்றவிடாமல் தடுத்தாக வேண்டும். இல்லையேல், நெல்லை மாவட்டம் கழகக் கோட்டையாகிவிடும் என்று கருதினர் சிலர்; அவர்கள் களித்திட, முதலமைச்சர் பக்தவத்சலனாரின் அரசு இந்த ஜனநாயகக் கொலையினைக் கூசாமல் செய்துவிட்டிருக்கிறது.

நண்பர் **மஜீத்** மேற்கொண்டு என்ன நடவடிக்கையில் ஈடுபடுவார்—வழக்குத் தொடரப்படுமா—என்பது பற்றிய பிரச்சினை இருப்பதனால், நாம் மேலும் விரிவாக இது குறித்து ஆராய விரும்பவில்லை.

ஒன்று மட்டும் கூறிக்கொள்வோம், நெல்லை நகராட்சி மன்றம் கலைக்கப்பட்டதால், நண்பர் **மஜீத்**தின் பெருமை ஒரு துளியும் பாதிக்கப்படவில்லை. நாட்டிலுள்ள நல்லோர்கள், அந்த இளைஞருக்கு வேண்டுமென்றே அரசியல் அழுக்காறு கொண்டோர் அநீதி இழைத்துள்ளனர் என்றே தீர்ப்பளிப்பர் என்பது உறுதி.

நண்பர் மஜீத், நெல்லை நகராட்சி மன்றத் தலைவர் பதவியை இழந்திடச் செய்தனர் அரசினர் என்றாலும், நெல்லையிலும் தமிழகத்திலும் நல்லோர் பல்லோரின் இதயத்தில் அவர் பெற்றுள்ள இடத்தைப் பறித்திட இயலாது. மஜீத்தின் புகழ் மேலும் ஓங்கி வளரும்.

எதிர்க்கட்சியை ஒடுக்க எதையும் செய்திடும் துணிவு மிக்கவர் முதலமைச்சர். இந்தச் செயல் அவருடைய அரசு செய்ததில், வியப்படைவதற்கும் இல்லை. ஆமாம்! ஐம்பதுபேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்!!—என்று அச்சம் கூச்சம், உருக்கம் ஏதுமின்றி பச்சையாகவே பேசிய பண்பாளர் அல்லவா பக்தவத்சலனார்! கழகத்தவரிடம் இருந்து வந்த ஒரு நகராட்சியைக் கலைத்தது அக்ரமம் என்றா ஒப்புக்கொள்ளப் போகிறார்.

நெல்லைச் சம்பவம், தமிழகத்தின் ஜனநாயக மாண்பு எந்தவிதமாக மாய்க்கப்பட்டு வருகிறது என்பதனை நாடு அறிந்திடச் செய்வதாகும். நாடு இந்த நல்லறிவு பெற்றிட, நண்பர் மஜீத் தமது பதவியை இழந்தார் என்றே நாம் கொள்கிறோம். காங்கிரசாட்சியின் போக்கை வெட்ட வெளிச்சமாக்கிக் காட்டியதற்குக் காரணமாக இருந்ததற்காக நண்பர் மஜீத் அவர்களுக்கு நம் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

முகப்பில்:

## பேரறிஞர் ரஸ்ஸல்

உலக அறிவாளர்களில் பேரறிஞர் எனப் பாராட்டப்படும் பெட்ரண்டு ரஸ்ஸல் முற்போக்கான கருத்துக்களைத் தீவிரமாகக் கொண்டவர். அஞ்சா நெஞ்சினர். மனிதகுல உரிமையைக் காத்திடும் மாண்பாளர்.

பல ஆண்டுகளாக எந்த பிரிட்டிஷ் தொழிற் கட்சியில் உறுப்பினராக இருந்து வந்தாரோ அதனையே உதறித் தள்ளினார்!

வியட்நாமில் அமெரிக்கா மேற்கொண்ட போக்கினை, பிரிட்டிஷ் தொழிற் கட்சி வன்மையாகக் கண்டிக்கத் தவறியதற்காக, இப்போது வடவியட்நாம்மீது அமெரிக்கா குண்டு வீசியதைக் கண்டித்து உலகெங்கும் **ஓர் நாள்** நடத்த வேண்டுமெனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

அவர் கூறிடும் கருத்துக்கள் சிலவற்றினை ஏற்றுக்கொள்ள இயலாத நிலையினரும்கூட இந்த மூதறிஞரின் அஞ்சா நெஞ்சினைப் பாராட்டத் தவறுவதில்லை.

அவருடைய திருஉருவப் படமே இந்தக் கிழமை **'காஞ்சி'** அட்டையை அலங்கரிக்கிறது.

# சூள் எடுப்போம்!

**"அடுத்த தேர்தலை மனத்திற் கொண்டு, சட்டங்களை உருவாக்குகின்ற தன்மை மாறி, அடுத்த தலைமுறையின் நன்மையைக் கருத்திற் கொண்டு சட்டமியற்ற வேண்டும்.**

**மனிதன் இரண்டு கால் முளைத்த ஓட் என்று கருதும் நிலைமையையே காண்கிறோம்; அவன் வெறும் ஓட்டு மட்டுமேயல்ல; அவன் ஒரு மனிதனுங்கூட"**

பாலாறும், தேன் மழையும் பார்க்கலாம் பாரதத்தில் என்றெல்லாம் பசப்பிவிட்டுப் பாராள வந்தவர்களின் செயல் பற்றிய ஒரு நற்சான்றிதழையே மேலே காட்டியிருக்கிறோம்.

**"மனிதன் இரண்டு கால் முளைத்த ஓட். அல்ல; அவன் மனிதனும்கூட"**—என்ற வாக்கிய அமைப்போடு **"தேர்தலை மனத்திற் கொண்டு சட்டங்கள் உருவாக்குகின்ற தன்மையையே காண்கிறோம்"** என்பதையும் கூட்டிச் சேர்த்துச் சிந்திக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது!

யாருக்கு இந்நிலை?

இந்தியாவின் அட்டர்னி ஜெனரல் எனப்படும் சர்க்கார் வக்கீலுக்கு இந்நிலை ஏற்பட்டிருக்கிறது.

சர்க்காரது சட்டத் தொடர்பான விஷயங்களுக்கு அவ்வப்போது ஆலோசனைகள் நல்கிக் கொண்டிருக்க வேண்டிய திரு. சி. கே. தப்தரிக்கு இந்நிலை!

கடந்த கிழமை தொடக்கத்தில் பம்பாய் ரோடரி சங்க மாதர் தினவிழாக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசியபோது, அவருக்கு, அவரது உள்ளத்தைக் குடைந்துகொண்டிருந்த இந்தக் கருத்தைக் கொட்டிக் காட்டிவிடவேண்டும் என்ற 'உந்தல்' ஏற்பட்டுவிட்டிருக்கிறது.

சர்க்காருக்கு சட்ட ஆலோசனைகளை வழங்கிக் கொண்டிருக்கும் அவர் பொதுமக்களிடத்தில் வந்து கூறுகிறார் 'மனிதனை இரண்டுகால் முளைத்த ஓட்டு' என்ற நிலை கூடாது என்று.

அப்படியானால் பொருள் என்ன?

ஆளவந்தவர்கள் நாட்டு வாக்காளர் பெருமக்களை, 'ஓட்டுச் சீட்டு' என்ற எண்ணத்திலே வழிநடத்திக் கொண்டிருக்கிறார்கள்; அதே கருத்திலேயே சட்டங்களையும் இயற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்பதல்லவா!

திரு தப்தரி, இந்தக் கருத்தினை இதுவரை சட்ட ஆலோசனைகளின்போது அரசினருக்கு எடுத்துக் காட்டவில்லையா? அல்லது எடுத்துக்காட்டியும் இயல்பிற்கொத்த எதேச்சாதிகாரத் தன்மையிலே எடுத்தெறிந்துவிட்டுவிட்டதா? அதன் உள்ளப் புழுக்கம் காரணமாகத்தான் மக்கள் மன்றத்திலே இக்கருத்தை வைத்துத் தீரவேண்டிய நிலை ஏற்பட்டதா?

இந்த வினா நமக்கு எழுவது இயல்புதானென்றாலும் அதைவிட,

இந்தக் கருத்துக்களின் ஆழத்தை மக்கள் தெள்ளத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டுவிட்டிருக்கிறது.

இதைச் செய்கிறோம், அதைச் செய்கிறோம்; வானுயர்ந்த தொழிற்கூடம் பாரீர்! தடம் அகன்ற நீர்த்திட்டம் பாரீர்! கல்வி வசதிகள் பாரீர்! சாலை வசதிகள் பாரீர்! பாரீர்! என்ற பாடல்கள் யாவும், தேர்தலை மனத்தில் கொண்டு தீட்டப்பட்டதுதானா? என எண்ணும்போது, இல்லை — அறிவிக்கப்படும் போது, இந்திய நாட்டு அரசியலின் கீழ்மை இவ்வளவு 'சிறப்புடைய'தாகவா இருக்கவேண்டும்? இந்நாட்டு ஏழை மக்களின் நல்வாழ்வு இந்த மகானுபாவர்களின் 'விரலிடுக்கிலா' சிக்கிக்கொண்டிருக்க வேண்டும் என்ற வேதனையும் பிறக்கத்தான் செய்கிறது.

திரு. தப்தரேயின் பேச்சில், அரசினரைச் சாடும் பல குற்றச்சாட்டுகள் காணப்பட்டாலும், மக்களையும் பார்த்து அவர் கூறுகிறார், 'சட்டத்தை மதிக்கின்ற போக்கும் வளரவேண்டும்'—என்று.

சட்டத்தை மதிக்காத போக்கு இருக்கிறது என்று கூறும் அவர், உணர்ந்தோ அல்லது உணராமலோ,

**இன்றையசட்டங்கள் சிக்கல் நிறைந்தவை; அடிக்கடி அவற்றை மாற்றுகிறார்கள். மக்களை நிர்ப்பந்திப்பதற்கு சட்டம் பயன்படுமாயின் அதற்குக் கீழ்ப்படியக்கூடாது என்ற எண்ணந் தான் உடனடியாகத் தோன்றும்.**

என்றும் அவரே பதில் கூறிக் கொண்டுவிட்டார்!

மக்களைக் குறை கூற நினைத்தாலும், அக்கூற்றும் இறுதியில் ஆளவந்தாரையே சென்று சாருகிறது.

எனவே இன்றைய இழி நிலைகளுக்கும், இடர்ப்பாடுகளுக்கும் முக்கிய மூல காரணங்கள், அரசினரின் சட்டங்களும், அதனைச் செயற்படுத்தும் முறைமைகளுமேயாகும் என்பது சட்ட ஆலோசகரின் தீர்ப்பு!

இந்த நிலை மாறவேண்டுமானால், நாட்டு மக்கள் வெறும் 'ஓட்டு' என்ற எண்ணத்தை அகற்ற வேண்டுமானால் 'வாக்குகளைக் கவருவதற்காகவே திட்டங்கள் தீட்டப்படுகின்றன' என்ற குற்றச்சாட்டைக் களைய வேண்டுமானால்—

இதே எண்ணத்தில் ஊறிப்போன "காங்கிரஸ்" காரர்களால் இனி முடியவே முடியாது! இனியும் காங்கிரஸ் சர்வாதிகார ஆட்சியை மாற்றி அமைக்காவிட்டால் இத்தகைய குற்றச்சாட்டுகளின் எண்ணிக்கை மிகுந்து கொண்டுதானிருக்கும்! குறைபாடுகளின் அளவு வளர்ந்து கொண்டுதானிருக்கும் என்பதை மக்களின் கவனத்துக்குக்கொண்டுவரச் சூள் எடுப்போம்!

**— சீயேயெம்.**


## சிறுகதைப் போட்டி

**சிறந்த மூன்று கதைகளுக்கு**

**ரூ. 500 அன்பளிப்பு.**

தமிழ் நாட்டில் இளம் எழுத்தாளர் துறை முன்னேற, புத்தம் புதிய எழுத்தாளர்களைப் பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்த 'சிறு கதைப் போட்டியொன்று' தொடக்கப்பெறும். தேர்ந்து எடுக்கப்பட்ட கதைகள் தனிப் புத்தக வடிவில் வெளிவரும். ஆர்வமுள்ள இளம் எழுத்தாளர்களே! எங்கே உங்கள் கதைகள்?

கதை எழுதும் விவரங்கள் அறிய 25-காசு அஞ்சல் பில்லையுடன் விண்ணப்பிக்கவும்.

**கலைச்செல்வி பதிப்பகம்,**

திருவாரூர் அஞ்சல்.

# தம்பி

இந்தக் கிழமையும் உன்னுடன் அளவளாவ இயலாத நிலை நீடிக்குமோ என்று அஞ்சிக் கிடந்தேன்; ஆனால் ஓய்வும் உட்கொண்ட மருந்தும் தக்கபடி வேலை செய்ததால், உடல்நலக் குறைவு வேகமாகக் குறைந்துவிட்டது. கழக இதழ்களில் காணக்கிடைக்கும் செய்திகள், எத்தனை சுறுசுறுப்புடனும் விறுவிறுப்பாகவும் பிரச்சாரப்பணி நடைபெற்று வருகிறது என்பதனை எடுத்துக்காட்டுகின்றன. இந்த மாமருந்து புதிய தெம்பினை அளிக்கத் தவறுமா!

வேலை மலைபோல! நாட்களோ அதிகம் இல்லை. இந்நிலையில் என் முழுப் பங்கினைச் செலுத்தியாக வேண்டும், அதற்குத் தக்கவிதமாக என் உடல்நிலை அமையவேண்டுமே என்பதே இன்று எனக்குள்ள கவலை. கவலை மட்டுமல்ல, தம்பி! வெட்கம்கூட!! எங்கு சென்றிடினும் தோழமை! எப்பக்கம் திரும்பிடினும் பேராதரவு! சிற்றூர்களிலெல்லாம் உன்னதமான உற்சாகம்! எங்கிருந்துதான் பணம் திரட்டுவார்களோ, எத்தனை

# கோட்டை வெளியில்.....

இன்னலோ தொல்லையோ; என்றாலும், ஒவ்வொரு நிகழ்ச்சியும் அந்த வட்டத்திற்கே தனிச் சிறப்பளிக்கத்தக்க விதமாக அமையும்படி ஏற்பாடு செய்கிறார்கள் கழகத் தோழர்கள். எடுத்துக் கூறிடும் கருத்துக்களைத்தான் எவ்வளவு உன்னிப்பாகக் கவனிக்கிறார்கள்! காங்கிரஸ் எதேச்சாதிகாரம் ஒழிக்கப்பட்டாக வேண்டும் என்பதிலே எவ்வளவு ஆர்வம் காட்டுகிறார்கள்; உறுதி தெரிவிக்கிறார்கள்! நாடு கொண்டுள்ள இந்தக் கோலத்தை நித்த நித்தம் காணவேண்டும்! ஒரே நாளில் பல காணவேண்டும்!! ஓய்வு ஒழிச்சலின்றிக் காண வேண்டும் என்ற துடிப்பு எனக்கு. அதற்குத் தக்கவிதமாக உடல் நிலை அமைய வேண்டுமே; இல்லையே என்பதை எண்ணும்போது என்மீதே எனக்குக் கோபம்!

தேவை மிகுதியாக இருக்கிறது; உணருகிறேன். அந்த உணர்வு, உடல் நலத்தைச் செம்மைப்படுத்திடும் என்றும் நம்புகிறேன். இல்லையென்றால், சென்ற கிழமை ஏற்பட்ட உடல்நலக் குறைவு இவ்வளவு வேகமாகக் குறைந்திருக்க முடியாது!

நமது கூட்டங்களில் எடுத்துக் கூறப்படும் கருத்துகள், பெரிதும் நாட்டு நலிவு, ஆட்சியாளர் மூட்டிவிட்ட அவதிகள், மக்களை அலைக்கழிக்கும் தொல்லைகள் என்பவைகளைப் பற்றித்தான். மக்கள் உள்ளத்திலே குடியேறிக்கொண்டுள்ள 'வேதனை' பற்றித்தான் நாம் எடுத்துக் கூறுகிறோம்; மனதுக்கு மகிழ்ச்சி தரத்தக்க விஷயங்களை அல்ல!!

சில வேளைகளில் எனக்கு ஒரு ஐயப்பாடு எழுவதுண்டு: இப்படி வேதனைகளைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கிறோமே, கேட்கும் மக்களுக்கு ஒரு கசப்புணர்ச்சி ஏற்பட்டு விடாதா, தொல்லையும் துயரமும் தரத்தக்க பேச்சினைத்தானா கேட்கவேண்டும் என்ற ஒரு சலிப்புணர்ச்சி ஏற்பட்டுவிடாதா என்ற ஐயப்பாடு.

ஆனால் நமது மக்கள், வேதனை பற்றிய பேச்சினை நாம் விடாது எடுத்துக் கூறிடுவது கேட்டு, கசப்போ சலிப்போ கொள்ளாமல் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருப்பதற்கான காரணம் தெரிந்த பிறகு, எனக்கு இருந்த ஐயப்பாடு போய்விட்டது. என்ன



# இடர்தரும் வாழ்க்கை எத்தனைக் காலம்?

அந்தக் காரணம் என்றால், தம்பி! மக்கள்,

**வேதனைகளைப் போக்கிக்கொள்ள முடியும்**

**வேதனை மூட்டியவர்களை விலக்கிட முடியும்**

**புதியதோர் வாழ்வினை நாம் பெற்றிட முடியும்**

**அதற்கான திறமையும் உரிமையும் தமக்கு உண்டு**

**என்ற நம்பிக்கையுடன் இருப்பதுதான் காரணம்;** அதனால் தம்பி! அவர்களுக்கு, திரும்பத் திரும்ப நாம் கூறுவதைக் கேட்டிட வேண்டும் என்ற ஆர்வத்தைத் தந்தபடி இருக்கிறது.

மக்கள் சிந்திக்கிறார்கள்; மிகத் தீவிரமாக. பிரச்சினைகளை ஆராய்ந்து பார்க்கிறார்கள். வேதனை தாக்குகிறது தத்தளிக்கிறோம், ஆனால் எத்தனைக்காலத்துக்கு? ஏன்? இதற்கு ஒரு முடிவே கிடையாதா? பரிகாரமே கிடையாதா? மாற்றமே கிடையாதா? என்ற கேள்விகள் கிளம்பிக் கிளம்பி, மக்களிடம் இன்று ஓர் புதிய உறுதியை எழச் செய்துவிட்டது. அந்த உறுதியைத் தம்பி! அவர்களின் கண்ணொளியும், முழக்கமும் எடுத்துக் காட்டுகின்றன.

வேதனை நாளாகவாகக் குறையும் மறையும் என்று எண்ணிப் பலகாலம் பொறுத்துக் கொண்டனர். பொழுது புலரும், புதுவாழ்வு மலரும் என்று நம்பிக்கொண்டிருந்தனர். ஆளவந்தார்களும் அந்த நம்பிக்கையை ஊட்டியபடி இருந்தனர். உழுதுவிட்டோம், விதை தூவப் போகிறோம்! விதை தூவிவிட்டோம், அறுவடை காணப் போகிறீர்கள்! —என்று வாக்களித்தபடி இருந்தனர். நல்லகாலம் பிறந்திடப் போகிறது, அதோ நம்பிக்கை நட்சத்திரம் எழுந்துவிட்டது, காணீர்!—என்று கூறியபடி இருந்தனர்.

**பொறுத்துக்கொள்ள வேண்டிய அளவு பொறுத்துக் கொண்டாகிவிட்டது.**

**காத்துக்கொண்டிருக்க வேண்டிய அளவு காத்துப் பார்த்தாகிவிட்டது.**

**நிலைமையைத் திருத்துவார்கள் என்று நம்ப வேண்டிய அளவு நம்பிப் பார்த்தாகிவிட்டது;**

**இனி இவர்களை நம்பிக் கிடப்பதில் பயனில்லை. நமக்கு வந்துற்ற வேதனையைப் போக்கிக்கொள்ள நாமாகத்தான் முயற்சி எடுத்தாக வேண்டும் என்ற உறுதியுடன் இன்று மக்கள் உள்ளனர்.**

வேடிக்கை அல்ல, தம்பி! உண்மையான நிலைமை இன்று என்னெனில், மக்கள் தயாராக உள்ளனர், உறுதியுடன் உள்ளனர், ஆட்சியிலே ஒரு மாற்றம் கண்டிட. மக்களுடன் தொடர்பு கொண்டுள்ள தலைவர்களே இன்று, தயாராக வேண்டும், மக்களை அணிவகுத்து அழைத்துச் செல்ல.

ஒரு வேடிக்கைச் சித்திரம் பார்த்த நினைவு வருகிறது.

குதிரைப் பந்தயம் நடைபெறுகிறது.

பல குதிரைகள் போட்டியிட்டு ஓடுகின்றன.

மிக வேகமாக ஓடிய ஒரு குதிரைமீது அமர்ந்திருந்தவன் கீழே விழுந்து விடுகிறான்.

இலக்கு இருக்கும் இடம் நெருங்குகிறது.

குதிரை, தன்மீது ஆள் அமர்ந்தில்லை என்ற காரணம் காட்டி, பந்தயத்தில் வெற்றி பெறவில்லை என்று கூறிவிடுவார்களோ என்று கவலைப்படுகிறது.

கவலை காரணமாக, ஓட்டத்தின் வேகத்தைக் குறைத்துக் கொள்ளவில்லை.

ஓட்டத்துடன் ஓட்டமாக, பந்தயத்தை பார்த்துக்கொண்டிருப்பவர்களை நோட்டம் பார்க்கிறது.

ஒரு ஆளை வாயால் கவ்வித் தூக்கித் தன் முதுகின் மீது அமரச் செய்கிறது.

இலக்கை வந்து அடைகிறது, வெற்றிப் பரிசு கிடைக்கிறது!!

இலக்கை நோக்கி வேகமாக ஓடிவரும் புரவி, தன்னைச் செலுத்துபவன் ஒருவனையும் தூக்கிச் செல்வதுபோல இன்று விழிப்புற்ற, எழுச்சிபெற்ற மக்கள் நிலை இருக்கிறது. தலைவர்கள், மக்களைத் தயார் செய்வதற்குப் பதிலாக, இன்று மக்கள், தலைவர்களைத் தயார் செய்கின்றனர், துரிதப்படுத்துகின்றனர், தீவிரப்படுத்துகின்றனர்.

**நம்மாலே ஆகுமா** என்ற இழுப்புப் பேச்சு இன்று மக்களிடம் இல்லை; நாம்தான் செய்தாகவேண்டும் என்ற உறுதி மிகுந்து காணப்படுகிறது.

வேதனைகளைத் தாங்கித் தாங்கி இனித் தாங்க முடியாது என்ற நிலைக்கு வந்துவிட்டனர். மாற்றம் கண்டாக வேண்டும் என்ற உறுதிகொண்டுவிட்டனர் மக்கள். எப்போது?

**இந்த வேதனைகளுக்கான காரணம் கேளீர் என்று துவங்கி, ஆளவந்தார்கள் கூறியவைகளைக் கேட்ட பிறகு!**

## இங்கே புகார் கூறவும்



'விலைவாசி ஏறிவிட்டதென்று பொதுமக்கள் எந்த போலீஸ் ஸ்டேஷனிலும் புகார் செய்யவில்லை' என்கிறாரே முதலமைச்சர் பக்தவச்சலம்: விலை உயர்ந்துவிட்ட நிலைமைக்கு நாம் ஜனநாயக ரீதியில் ஒரு போராட்டமே நடத்தி சிறை சென்றோமே! அதுகூட அந்த அறிவாளரின் அறிவுக்குப் படவில்லையா? **விலையேறிவிட்டது என்று மக்கள் போலீஸ் ஸ்டேஷனில் புகார் செய்யவேண்டுமாமே!**

# வரி கொடுத்தோமே! வாழ்வு கொடுத்தாயா?

**காரணம் எதுவும் பொருத்தமாக இல்லை; விளக்கம் போதுமானதாக இல்லை என்பதைக் கண்டறிந்தான பிறகு!**

**அன்புரை தருவதற்குப் பதிலாக ஆட்சியினர் அடக்குமுறையை அவிழ்த்து விடுவதைக் கண்டு மனம் வெதும்பிய பிறகு!**

தேனும் பாலும் ஆறுக ஓடும் என்று காங்கிரசார் ஆளவந்தார்களாவதற்கு முன்பு கூறினர்; மக்கள் விவரமறியாதவர்கள் அல்ல; தேனும் பாலும் ஏன் ஆறுக ஓடவில்லை என்று ஆளவந்தார்களான காங்கிரசாரைக் கேட்கவில்லை. கண்ணீரும் இரத்தமும் பீறிட்டுக் கொண்டு வரும் நிலையையாவது மூட்டிவிடாமல் இருக்கக் கூடாதா என்றுதான் இன்று கேட்கின்றனர். தேனும்வேண்டாம் பாலும்வேண்டாம் சோறும் மோரும் போதும், அதுவாவது தரக் கூடாதா என்று கேட்கின்றனர் அடிப்படைத் தேவைகளை மட்டுமே கேட்கின்றனர்; அளவற்ற போகபோக்கியத்தை அல்ல.

**அதுவும், இதற்கு முன் என்றுமே கொடுத்திராத அளவு வரிப் பணத்தைக் கொட்டிக் கொடுத்துவிட்டு, இந்த அடிப்படைத் தேவைகளைக் கேட்கின்றனர்.**

உண்மையைச் சொல்லுவதானால் தம்பி! வெள்ளைக்காரன், இன்றுகாங்கிரசாட்சி வசூலிக்கும் வரிப்பணத்தின் அளவைக்கேட்டு, ஆச்சரியத்தால் மூர்ச்சித்துக் கீழே விழுவான்! அவ்வளவு பெரிய அளவு வரிப்பணம் கிடைக்கிறது! வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி ஏழை எளியவர்கள் கொட்டிக் கொடுக்கிறார்கள். தொட்டதற்கெல்லாம் வரி! தொடர்ந்து வரி! சுமை ஏறியபடி இருக்கிறது! விதவிதமான வரி! எல்லாம் ஏழையின் முதுகெலும்பை முறிக்கத் தக்க விதமான வரிகள்.

பொதுமக்கள் புள்ளி விவரம் தெரிந்து கொள்ளாமலிருக்கலாம்; முன்பு இருபது கோடிக்கும் குறைவாகவே வரிகொடுத்து வந்தோம்; இப்போது இருநூறு கோடி அளவுக்குக் கசக்கி எடுத்துக் கொள்கிறார்கள் என்ற உண்மையை, உணருகிறார்கள், தமது வாழ்க்கையிலே ஏறிவிட்டுள்ள சுமையின் அழுத்தத்தைக் கொண்டு.

பொருளாதாரத் துறையின் அரிச்சுவடி அளவு அறிந்தவர்களும், வரிவகையில், ஏழை மக்களை வாட்டி வதைக்கக் கூடியது மறைமுக வரி (Indirect tax) என்பதை அறிவர்.

பண்டங்களின் மீது விதிக்கப்படும் **விற்பனை வரி.**

இறக்குமதி செய்யப்படும் பண்டங்களின் மீது விதிக்கப்படும் சுங்க வரி.

போன்ற மறைமுக வரிகள், காங்கிரசாட்சி ஏற்பட்ட பிறகு, எத்தனை வேகமாக வளர்ந்திருக்கிறது என்பதையும் எத்தனைப்பெரிய அளவு ஆகிவிட்டிருக்கிறது என்பதையும் கணக்கெடுத்துப் பார்த்தால், இந்த ஆட்சி நடத்திடும் கொடுமையின் வகை விளங்கிடும்.

இந்த மறைமுக வரிகள்மூலம் இந்தியப் பேரரசு 1964—65-ம் ஆண்டிலே மட்டும் பெற்றுள்ள தொகை **1247 கோடி ரூபாய்.**

இவ்வளவும், ஏழைகள் எப்பாடுபட்டேனும் வாங்கித் தீரவேண்டிய பண்டங்களின்மீது விதிக்கப்பட்டுள்ள வரிகள்மூலம் கிடைக்கிறது.

**அதே ஆண்டில், சீமான்கள் கட்டிய வருமானவரியின் தொகை எவ்வளவு? 294 கோடி ரூபாய்'**

இதுதான் தம்பி! காங்கிரசின் ஜனநாயக சோஷியலிசம்.

**ஏழை கட்டும் தொகை 1247-கோடி! பணக்காரன் கட்டுவது 294-கோடி!!**

ஏழையால், வரியிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது; அவன் வாங்கித் தீரவேண்டிய பண்டங்களின்மீது வரி, மறைமுகமாகச் சேர்க்கப்பட்டிருப்பதால்.

**ஏழை வாங்கித் தீரவேண்டிய கிரசின் எண்ணெய்க்காக அவன் தரும் பணத்தில் 45 சதம் வரியாகிறது!**

**ஏழை வாங்கிடும் சர்க்கரைக்காகக் கொடுக்கும் பணத்திலே 50-சதம் வரியாகிறது!**

**ஏழை பயன்படுத்தும் தீக்குச்சிக்காகத் தந்திடும் பணத்தில் 62-சதம் வரியாகிறது!**


**விற்பனையாகிறது!**

# "தென்னவன்"

(திங்களிதழ்)

சிறப்பாசிரியர்:
**கி. ஆ. பெ. விசுவநாதம்**

ஆசிரியர்:
பாண்டி. குழ. செங்குட்டுவன்

ஆசிரியர் குழு:
க. அறிவழகன் எம்.ஏ.,
புலவர் வி. பொ. பழநிவேலன் பி. ஓ. எல்.
புலவர் தி. நா. அறிவுஒளி.

பேரறிஞர்கள் பலரது அரசியல், கலை, இலக்கியக் கட்டுரைகள் கதை கவிதைகள் நிறைந்தது!

**இன்றே சந்தாதாரராகுங்கள்! தனி இதழ் 30 காசுகள்**
ஆண்டுக்கட்டணம் உள்நாடு ரூ. 4.
வெளிநாடு ரூ. 6

இதழ் ஒன்றுக்கு 50 காசுகள் முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை. 25 சதம் கழிவு உண்டு.

விண்ணப்பிக்கவும்:
பொறுப்பாளர், 'தென்னவன்'
பாண்டிக்குடி, பனங்குடி அஞ்சல்,
தஞ்சை மாவட்டம்.

# ஆணவப் பேச்சுகள் அழிவுக்கு அறிகுறி!

ஏழை வாங்கியாகவேண்டிய ஒவ்வொரு பண்டத்துடனும் இந்த மறைமுகவரி சேர்ந்திருக்கிறது.

**அப்படி ஏழை கொட்டிக்கொடுக்கும் தொகை 1247 கோடி! அதைக் கூசாமல்; பெற்றுக்கொண்டுதான் காங்கிரசாட்சி கூவுகிறது; தனது திட்டம் ஜனநாயக சோஷியலிசம் என்று.**

சில நூறுகோடி ரூபாய் அளவுக்கும் ஏருமலிருந்த இந்த மறைமுகவரியை ஆயிரம் கோடி ரூபாய்க்குமேல் ஏற்றிவிட்டு, காங்கிரசாட்சி ஏழையின் வாழ்க்கையை உயர்த்துவதாகவும் பேசுகிறது; மறுத்தால் உருட்டி மிரட்டிப் பார்க்கிறது.

ஆயிரம் கோடி ரூபாய்க்குமேல், மறைமுகவரி கொடுக்கத்தக்க விதமாக ஏழையின் வாழ்வு காங்கிரஸ் ஆட்சியினுல், உயர்ந்துவிட்டதா, செம்மைப்பட்டுவிட்டதா? என்று பார்த்திடின், தம்பி! முன்பு இருந்து வந்ததைவிட ஏழையின் வாழ்வு செல்லரித்துக் கிடப்பதற்குத்தான் சான்றுகள் கிடைக்கின்றன.

**ஜெயப்பிரகாசநாராயணன், தேபர்,** போன்ருர் இதற்குச் சான்றளித்துள்ளனர்.

**வினேபாபாவே,** மனம் குமுறி இது குறித்துப்பேசியிருக்கிருர்.

பொருளாதாரத் துறையின் ஆய்வாளர்கள் இதனைப் படம்பிடித்துக் காட்டியுள்ளனர்.

மற்ற இடங்களுக்குச் செல்வானேன், சர்க்காரே, புள்ளிவிவரம் தந்திருக்கிறது, நாலாவது ஐந்தாண்டுத் திட்டம்பற்றிய அறிக்கையுடன் இணைத்து.

| | | |
|---|---|---|
| **430-இலட்சம் மக்கள்** | — | **தினம் 30-பைசா** |
| **430-இலட்சம் மக்கள்** | — | **42-பைசா** |
| **460-இலட்சம் மக்கள்** | — | **51-பைசா** |
| **430-இலட்சம் மக்கள்** | — | **59-பைசா** |

பெற்று வாழ்ந்து வருவதாக!

பெற்றுவரும் வரிப்பணத்தின் அளவு என்ன? அதைக்கொண்டு மக்களின் வாழ்க்கையை எந்த அளவு செம்மைப்படுத்த முடிந்தது? என்று கேட்டால், கடுங்கோபம் பீறிட்டுக்கொண்டுவருகிறது காங்கிரசாருக்கு. பணக்காரனை மட்டும் விட்டுவிட்டோமா? வரிபோடுகிருேமே! என்கிருர்கள். எவ்வளவு என்று கேட்டால் 294-கோடி! என்று கணக்களிக்கிருர்கள். ஏழைக்கு ஆயிரம் கோடிக்குமேல்! பணக்காரனுக்கு அதிலே கால்தானு என்ருல், ஆமாம்! அப்படித்தான்!! என்று அடித்துப் பேசுகிருர்கள்.

பணக்காரர்களுக்குப் போடும் வரித் தொகையை யாவது சரியான முறையிலே வசூலித்துக்கொண்டு வருகிருர்களா? — என்று கேட்டால், கொஞ்சம் 'நிலுவை' இருக்கிறது என்கிருர்கள். எவ்வளவு இருக்கும் அந்த நிலுவை என்று கேட்டால், ஒருவர் 300 கோடி இருக்கும் என்கிருர், இன்னெருவர் 500 கோடி இருக்கும் என்கிருர், வேருெருவர் ஆயிரம் கோடிக்குக் குறையாது என்கிருர்.

**ஏழையால் ஒரு ரூபாய் வரியைக் கொடுக்காமல் தப்பித்துக்கொள்ள முடியாது. பணக்காரர்கள் பலநூறுகோடிரூபாய் வரிப்பணத்தைச் செலுத்தாமலே காலத்தை ஓட்ட முடிகிறது. இதுதான் காங்கிரசின் ஜனநாயக சோஷியலிசம்.**

இதனை மெத்தத் தெளிவாக விளக்குவதுபோல இந்த ஆட்சியினர், உத்திரப்பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு முதலாளி செலுத்தவேண்டிய வருமான வரித் தொகையை — 30 இலட்ச ரூபாய் அளவு — தள்ளுபடி செய்துவிட்டனர்.

காங்கிரசின் ஜனநாயக சோஷியலிசத்தின் கனியைச் சுவைத்த இந்த முதலாளி ஒரு காங்கிரஸ்காரர்; பிரமுகர்!!

ஒரு விளக்கம், ஒரு சமாதானம் கூறவேண்டுமே, இந்த அக்ரமத்துக்கு! கிடையாதே! ஆமாம்! அப்படித்தான்!! என்று அடித்துப் பேசுகின்றனர் ஆளவந்தார்கள்! யார் கேட்க முடியும் என்ற துணிவுடன்; என்ன செய்துவிட முடியும் என்ற ஆணவத்துடன்.

அவரால் வரித் தொகையைக் கட்ட இயலவில்லையாம்!!

ஏழையால் மட்டும் வரிச் சுமையைத் தாங்கிக்கொள்ள முடிகிறதா?

முடிகிறதே!

எப்படி?

கடன் படுகிருன்!

எவ்வளவு?

**ஆய்வாளர்கள் தந்துள்ள கணக்கின்படி, விவசாயக் குடும்பத்தினர் பட்டுள்ள கடன் தொகை மட்டும் 2789 கோடி ரூபாய்!**

**ஆக, காங்கிரசாட்சியில் பணக்காரன் வரி கட்டமாட்டான்; தள்ளுபடி செய்துவிடப்படும்! ஏழை கடன்பட்டாகிலும் வரி கட்டியாக வேண்டும். இதுதான் காங்கிரசின் ஜனநாயக சோஷியலிசம்.**

## இனி நடக்காது!



"ஒவ்வொரு பொதுத் தேர்தலிலும் காங்கிரசுக் கட்சி தன் பண பலத்தைக் காட்டித்தான் வெற்றி பெற்று வருகிறது. 'பணத்தை நம்பி வாழ்ந்த கட்சி என்றும் நிலையோடு இராது' என்பதற்கு பல நாடுகளில் உள்ள பணக்காரக் கட்சிகள் கவிழ்ந்து தொழிற் கட்சிகளும், இதர கட்சிகளும் வெற்றி பெற்றுவருவதே கண்கூடு. எனவே; 'பணத்தால் ஒரு கட்சி வாழ்கிறது' என்பது இனி நடக்காத செயல்; அரசியல் விழிப்பு ஏற்பட்டு வருகிறது; காங்கிரசுக்காரர்களின் ஏமாற்று வேலைகளை மக்கள் இனி நம்பமாட்டார்கள்.

# பாலுக்கும் காவல் பூனைக்கும் நண்பனும்!

எதிர்க்கட்சிகள் இப்படித்தான், எதையாவது கிளறும், ஏதாவது குளறும், காங்கிரசாட்சி ஒன்றுமே செய்யவில்லை என்று பொய் பேசும். காங்கிரசாட்சி ஒன்று மேவா செய்யவில்லை? என்று கேட்டுவிட்டு,

விளக்குக் கம்பங்கள்
மின்சார பல்புகள்
பம்பு செட்டுகள்
போவி காலைகள்
உரக் குழிகள்
அணைகள், தேக்கங்கள்
பள்ளிக்கூடங்கள்
மருத்துவ மனைகள்
தொழிற் பேட்டைகள்

ஆகியவற்றின் கணக்கை நீட்டுகின்றனர்.

இவைகளைக் கணக்குக் காட்டும்போது, வெள்ளையராட்சியில் வாங்கிய வரிப் பணம் எவ்வளவு, இப்போது இவர்கள் வாங்கிடும் வரிப்பணம் எவ்வளவு என்ற கணக்கை மட்டும் மறைத்துவிடுகிறார்கள்.

இவர்கள் மறைத்தாலும் மக்கள் மறந்தாபோய்விடுவார்கள்!

அவர்களுக்கும் கணக்குத் தெரியும்.

**தெரிந்துவிட்டதால்தான் கணக்குத் தீர்த்தாகவேண்டும் என்ற உறுதிகொண்டுவிட்டிருக்கிறார்கள்.**

கட்டிய பள்ளிக்கூடம், நட்டுவிட்ட மின்சாரவிளக்குக் கம்பங்கள் ஆகியவைகளைக் காட்டியேவா காங்கிரஸ் ஆட்சி காலந் தள்ளிக்கொண்டு போக முடியும் — இனியும்! பித்தனும் ஏற்றுக்கொள்ள மாட்டானே!

கொடுத்த வெண்ணெய் எவ்வளவு; கிடைத்த நெய் எவ்வளவு என்ற கணக்கா புரியாமலிருக்கும், மக்களுக்கு!

விளைந்ததில், நெல் எந்த அளவு, பதர் எந்த அளவு என்று பிரித்துப் பார்க்கவா தெரியாது, மக்களுக்கு.

இறைத்தது எவ்வளவு, பாய்ச்சல் கிடைத்தது எந்த வகையில் என்பதுபற்றிப் பார்த்திடவா தெரியாது, மக்களுக்கு.

**தெரிந்துவிட்டது. அதனால்தான் அவர்கள் உறுதிகொண்டுவிட்டார்கள் ஆட்சி மாற்றப்பட வேண்டும் என்று.**

இன்று அந்த மக்களை மயக்க, ஜனநாயக சோஷியலிசம் பேசிப் பார்க்கிறது காங்கிரஸ் அரசு!

மக்கள், காங்கிரசின் நடுநாயகர்கள் எவரெவர் என்று பார்க்கின்றனர்?

ஜனநாயக சோசயலிசம் திட்டமாவது உண்மையானால், இத்தனைச் சீமான்கள், இந்தக் காங்கிரசிலே இடம் பெற்றிருப்பார்களா? என்று கேட்கிறார்கள்.

எங்கள் சோஷியலிசத்தில் ஏழையும் இருப்பான்' பணக்காரனும் இருப்பான் — நாங்கள் பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்று காங்கிரசின் பெரியவர்கள் கூறுகிறார்கள். ஓ! அப்படியா! உங்கள் சோஷியலிசம் அப்படிப்பட்டதா!! எங்களுக்கு சோஷியலிசம் வேண்டும் உங்கள் ஜோடனையிசமல்ல என்று மக்கள் கூறுகின்றனர்.

டாட்டா பிர்லா கூட்டாளி
பாட்டாளிக்குப் பகையாளி

என்று நமது கழகத் தோழர்கள் கூறும்போது, எழு

## சொல்வோம்! வெல்வோம்!

பாலமுதால் பழச்சாற்றால் வளர்ந்த தல்ல;
பன்னீரில் குளித்ததல்ல நமது கட்சி!
காலமெல்லாம் தென்னாட்டு மக்கள் சிந்தும்
கண்ணீரில் செந்நீரில் வளர்ந்த கட்சி!
கோலப்பூஞ் சோலையதன் குளிர்ந்த காற்றால்
குறையாதா? மறையாதா கோடை வெப்பம்!
ஆலையின்கீழ்க் கரும்பான மக்கள் துன்பம்
அகலாதா? கழகத்தால் குறைந்தி டாதா?

மாந்தளிரை அலைக்கழிக்கும் சூறைக் காற்று!
மக்களையே அலைக்கழிக்கும் இந்த ஆட்சி!
தீந்தமிழில் முதல்எதிரி இந்த ஆட்சி!
தேவையடா இனிமேல்நம் சொந்த ஆட்சி!
கூந்தலுக்கு நெய்போட்டு வளர்த்த நாட்டில்
கூழுக்கே உப்பில்லை இந்த நாளில்!
நீந்தட்டும் தண்ணீரில் மீன்கள்; இங்கே
நீந்துவதேன் கண்ணீரில் மக்கள் கண்கள்?

பந்துக்குத் தேவைஎது? காற்று! ஓசைப்
பாட்டுக்குத் தேவைஎது? சந்தம்! மக்கள்
சிந்தைக்குத் தேவைஎது? தூய்மை! நாட்டைச்
சீர்திருத்தத் தேவைஎது?. நல்ல கட்சி!
முந்திவந்த தேர்தலல்ல இந்தத் தேர்தல்!
முன்னேற்றக் கழகத்தைப் போட்டி தன்னில்
முந்தவைப்போம்! குந்தவைப்போம் ஆட்சி
தன்னில்!
முறியடிப்போம் காங்கிரசை! திணற
வைப்போம்!

'கத்தரிக்காய் வாழைக்காய் ,விற்ப தைப்போல்
காசுக்கு விற்காதீர் வாக்குச் சீட்டை!
புத்திக்கு மதிப்பளிப்பீர்! நன்மை செய்யும்
புதுக்கட்சி அரசாள வழிவ குப்பீர்!'
எத்திசையும் இதுபோல முழக்கம் செய்வோம்!
எங்கள்உயிர் முன்னேற்றக் கழகம்! நாட்டின்
சொத்து!கனிக் கொத்து!எனச் சொல்வோம்!
வெல்வோம்!
சூதுமதி படைத்தோர்முன் தோற்க மாட்
டோம்!

—புலவர் பொன்னிவளவன்.

# வேலைகள் அதிகம்! நேரம் இல்லை!

கிறதே தம்பி! மகிழ்ச்சி ஆரவாரம், அதற்குக் காரணம், மக்கள் பெற்றுவிட்டுள்ள தெளிவு.

இந்தத் தெளிவு பிறந்திட நமது கழகம் பெரும் அளவு பணியாற்றி இருக்கிறது என்பதிலே நாம் பெருமிதம் கொண்டிடலாம் என்றாலும், இத்தனைத் தெளிவு பிறந்துள்ளபோது, ஆட்சியை மாற்றிடும் செயலில் வெற்றி பெற்றால்தான், உண்மையான பெருமைக்கு நாம் உரியவர்களாவோம்.

அதற்காக நாம் மேற்கொள்ளவேண்டிய பணிகள் அடுக்கடுக்காக உள்ளன. வேலை, அதிகம்! நேரம் அதிகம் இல்லை!!

சென்ற ஆண்டே நடந்து முடிந்திருக்க வேண்டிய மாநாடுகளை நாம் இப்போதுதான் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

திருச்சியில் துவக்கினோம்; நாம் மகிழத்தக்க விதமாகவே மாநாடு நடந்தேறியது.

இப்போது **வேலூர்** கோட்டை வெளியில் அழகுற அமைகிறது மாநாட்டுப் பந்தல்.

திருச்சியில் திறந்தவெளி அரங்கு; இங்கு பாங்கு நிறைப் பந்தல்.

நமது கழக மாநாடு, பல்லாயிரவர் கூடிடும் பாசறை மட்டுமல்ல, குடும்பம் குடும்பமாக நமது கழகத்தவர் கூடிடும் அறிவகம்.

பல்வேறு ஊர்களினின்றும் வந்திடுவோர், தத்தமது இடத்து நிலைமைபற்றி உரையாடி, மொத்தத்தில் அமைந்துள்ள சூழ்நிலையினை அறிந்து அகமகிழ்ந்திடும் அரியதோர் வாய்ப்பாகும்.

திருச்சியில் திறந்தவெளி மாநாடு—எனவே காலையிலும் பிற்பகலிலும் காய்கதிரோன் குறுக்கிட்டதால், கழகப் பேச்சாளர் பலர், கருத்து விருந்து அளித்திடும் வாய்ப்பினைப் பெற்றோமில்லை.


தமிழ் நாட்டில் தனிச் சிறப்புடன் விளங்குவது

**ஜெயா பார்மஸி H.O. பெரியகுளம்**

**சர்க்காரால் அங்கீகாரம் செய்யப்பட்டது.**

**(Recognised by Central Board of Indigenous Madicine Madras)**




**பொதுமக்கள் ஏமாற்றமடையாதிருக்க, எங்களது மருந்துகளை வாங்கும்போது, ஜெயா பார்மஸி H. O. பெரியகுளம் என்பதையும் லேபிளில் உள்ள முத்திரையையும் கவனித்து வாங்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.**

JEYA

பிராஞ்சுகள்:

51, Dr. நடேசன் ரோடு, சென்னை-5.
51, செஞ்சி ரோடு, திண்டிவனம்.
17, நெல்கடைத் தெரு, மாயவரம்.
2 வள்ளிமால் தெரு (சிங்காரத்தோப்பு எதிர்) பெரியகடைவீதி, திருச்சி-8.
28 நெத்திமேடு, கோயம்புத்தூர் ரோடு, சேலம்-2
208 ஒப்பணக்காரத்தெரு கோயம்புத்தூர்
63, மார்க்கட் ரோடு, தஞ்சாவூர்.
47A கண்ணம்மாள்கோயில்தெரு திருநெல்வேலி ஜங்.
மற்றும் தமிழகமெங்கும் ஏஜண்டுகள்.

புதிதாக ஏஜன்ஸி வேண்டுவோர், தலைமை நிலையத்திற்கோ, பிராஞ்சிற்கோ விண்ணப்பிக்கவும்.

உரிமையாளர்: **J. M. ராஜன்,** ஜெயா பார்மஸி, மதுரைரோடு திண்டுக்கல்.
போன்: 348, 348-A, 438.

# கோட்டை வெளியினிலே

வேலூரில் எழில் மிக்கதும், வசதி நிரம்பியது மான முறையில் பாங்கான பந்தல் அமைத்துள்ளனர்.

இரு நாட்களிலும், எழுச்சி யூட்டத்தக்க விளக்க உரையாற்றிடும் நமது கழகத் தலைவர்கள் வருகின்றனர்.

கழகக் கலைஞர்கள், கருத்து விருந்துடன் கலை விருந்தும் தந்திட இசைந்துள்ளனர்.

முத்தமிழ் முழங்கிடும் திரு இடமாகத் திகழப் போகிறது வேலூர் மாநாடு.

வீரர் அணிவகுப்பைக் கண்டிடவும், வெற்றிப் பாதை வகுத்திடவும், வாரீர் வாரீர் என்று அனைவரையும் அழைக்கின்றேன்.

நாட்டை வாட்டிடும் கேட்டினைப் போக்கிட, கோட்டை வெளியினில் கூடுவோம் வந்திடுவீர் என்றழைக்கின்றேன்.

திருச்சி போலவே வேலூர் எனக்கு ஒரு திருத்தலம்.

திருச்சியில் ஒரு முறை சிறை சென்றேன். விலைவாசிக் குறைப்புக்கான அறப் போராட்டத்தின்போது வேலூர் சிறையில் இடம் பெற்றேன்.

மாநாடு கூடிடும் கோட்டை வெளியைக் கடந்து, கோட்டைக்கு உட்புறம் உள்ள துரைத்தன அலுவலகத்திலேதான், இன்று மாநாட்டு அலுவல்களை உற்சாகத்துடன் கவனித்துக் கொள்ளும் மாவட்டச் செயலாளர் தருமலிங்கம், வேலூர் நகராட்சி மன்றத் தலைவர் சாரதி, உறுப்பினர் தேவராஜி, தொண்டர் படைத் தலைவராக உள்ள இளஞ்செழியன், அவர் துணைவியார், மற்றும் ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் சம்பங்கி, வாணியம்பாடி சட்டமன்ற உறுப்பினர் முல்லை வடிவேலு ஆகிய பலர் கொண்ட அணிவகுப்பில் நான் நின்று மறியல் செய்தேன். எங்களுடன் சிறையில் திருவண்ணாமலை சட்டமன்ற உறுப்பினர் ப. உ. சண்முகம், முருகையன், திண்டிவனம், வானூர் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கவேலு, பாலகிருஷ்ணன் ஆகிய பல நண்பர்கள் இருந்தனர். என்னுடன் அன்று இருந்த வேலூர் நண்பர் பாலசுந்தரம் மறைந்துவிட்டார்.

இப்போதும், அந்தோ! என் மனக் கண் முன் நிழலாடுகிறதே, **போளூராரின்** இனிய முகம்.

அந்தச் சிறையிலே அவரைக் கண்டதும், சிறை என்ற எண்ணமே பறந்தோடிவிட்டதே! அந்த சிரித்த முகத்தைக் காணமுடியாது. ஆனால், மாநாட்டிலே வந்திடும் எவருக்குத்தான் அந்த இனியவரின் நினைவு நெஞ்சிலே எழாதிருக்கும், கண்களிலே நீர் துளிர்த்திடாமலிருக்கும்.

அவர் பெயரால், பந்தல்—அங்கு கூடுவது, மறைந்த அந்த மாவீரனுக்குச் செலுத்தும் அஞ்சலியில் ஒருவகை என்றே நான் கருதுவேன்.

திருத்தலம் என்றும் கூறுவேன், அந்த மாநாட்டினை! அங்கு, தம்பி! உன்னை உன் நண்பர்களுடன் கண்டு அளவளாவ விரும்புவது இயற்கைதானே!

நண்பர்கள் மட்டுந்தானா அண்ணா! — என்று கேட்டிடாதே, உன் குறும்புப்புன்னகையின் பொருள் விளங்காமலில்லை, உன் கோலமயிலுடன் வந்து சேர்; எழிலூட்டு; எழுச்சியூட்டு; எதிர்காலத்தை ஒளிமயமானதாக்கிடு. தம்பி! நீ உலவினால்தானே 'கோட்டை' என்ற பெயரின் முழுப் பொருளும் நான் உணர முடியும்.

அண்ணன்,

அண்ணாதுரை

## கடன் உயராதாமே!

ரூபாயின் மதிப்பு குறைக்கப்பட்டதால் வெளிநாட்டிலிருந்து நாம் வாங்கியுள்ள கடனுக்கு அதிகமான தொகை, திருப்பித் தர வேண்டும் என்று சிலர் பிரஸ்தாபித்து வருகின்றனர். இது சரியில்லை. கடனைப் பெற்ற தொகையைப் பண்டமாகவும் தங்கமாகவும் திருப்பித்தரவேண்டும். ஆகவே கடன் தொகைக்கு அதிக ரூபாய் திருப்பித் தரவேண்டி வராது,

—சி. சுப்பிரமணியம்.

# கூடுவோம் வாரீர் குடும்பத்தோடு

# பாண்டியன் திருமேனி



## கே.ஜி. இராதாமணாளன்

### 2—8
### புதுத் திட்டம்!

“தமயந்திக்கும் இவர்களுக்கும் என்ன தொடர்பு?” என்ற எண்ணத்தோடு, அறிவொளியடிகளைக் குலசேகரன் திரும்பிப் பார்த்தான்.

அவனது கருத்தைப் புரிந்து கொண்டவரைப் போல, ‘இவள் யார் தெரியுமா, பூஞ்சோலை?” என்று அடிகள் கேட்டதும், தெரியாதே என்று சொல்வதைப் போல குலசேகரன் தலையசைத்தான்.

“என் மகள், தம்பி! பெயர் தமயந்தி!” என்று சங்கம்மாள் பதிலளித்தாள்.

குலசேகரனைப் பார்த்து, ‘வணக்கம்!’ என்றாள் தமயந்தி—பழத்தட்டைக் கீழே வைத்துவிட்டு,

அவள் முகத்தை உற்றுப் பார்த்தபடி, அவனும் பதிலுக்கு ‘வணக்கம்’ என்றான்.

அவன் தன்னை உற்றுப் பார்க்கிறான் என்பதைக் கண்டதும், தமயந்தி தன் பார்வையைச் சுவரில் மாட்டியிருந்த புத்தர் ஓவியத்தின் மீது செலுத்தினாள்.

குலசேகரன் அடுத்து தன் கவனத்தைச் சங்கம்மாள்மீது செலுத்தினான்.

வெள்ளை வெளேரென்ற சேலையணிந்து அவர்கள் எதிரே உட்கார்ந்திருந்த சங்கம்மாளின் முகத்தில் காலத்தின் வரிக் கோடுகள் ஏராளமாக இருந்தன. பற்கள் எல்லாம் விழுந்துவிட்டதினால், கன்னத்தில் பெரிய குழி! கற்றாழை நாரைப் போன்ற நிறத்திலும் மினு மினுப்பிலும் தலை மயிர்! அந்த வயதிலும் அவள் மிகவும் ஆரோக்கியமாகக் காணப்பட்டாள்.

“இந்தக் கிழவியைக் கவனித்தால் வஞ்சகியாகவோ; சூழ்ச்சிக்காரியாகவோ தெரியவில்லையே! இவள் மகள் மட்டும் எப்படித் தூமகேதுவின் கையாளாக இருக்கிறாள்! வீட்டிலோ புத்தர் ஓவியம்; பேச்சிலோ புத்தர் கொள்கைகள்! பழகுவதோ பௌத்தர்களோடு! அப்படிப்பட்ட ஒரு மூதாட்டியின் மகள். எப்படி சைவத்தின் தூணான—பழமையின் பாதுகாவலனான—தூமகேதுவிற்கு ஏவல் செய்கிறாள்? ஒரு வேளை, இந்தக் கிழவியும் தூமகேதுவின் ஆள்தானோ? பௌத்த மதத்தைச் சேர்ந்தவள் எனச் சொல்லிக் கொண்டு, அதற்கான நடிப்புகளைச் செய்துகொண்டு, பௌத்தர்களோடு பழகி, அவர்களின் இரகசியங்களையும் திட்டங்களையும் அறிந்து, பௌத்தத்திற்கு விரோதமான அழிவு வேலையில் ஈடுபட்டிருப்பாளோ? தூமகேதுவிற்கு எவ்வளவு திறமை இருக்கிறது என்பது, பாண்டியநாட்டிற்கு வெளியில்வந்து பார்த்தால் தானே தெரிகிறது! உத்தமர் அறிவொளியடிகளும், நல்ல மனங்கொண்ட அஞ்சலையும் சூதுக்கூடமான இந்த இல்லத்தில் இருக்கிறார்களே? நாட்டிற்குத் திரும்பியதும், அந்த நயவஞ்சகன் தூமகேதுவினால் என்னென்ன ஆபத்துக்கள் காத்திருக்கின்றனவோ? தூமகேதுவின் ஒற்றர் குழுவைச் சேர்ந்தவள் தமயந்தி என்பதையும், சில தினங்களுக்கு முன்பு ஓர் இரவு அவள் வைத்த ஓலையை நான் எடுத்துப் படித்ததையும், அஞ்சலையிடம் கூறிவிடலாமா? அப்படிச் சொன்னால் அதனால் ஏதாகிலும் புதிய ஆபத்து உண்டாகுமோ?”

சாப்பிட்டுக்கொண்டே இருந்த குலசேகரனின் மனதில் பற்பல எண்ணங்கள் தோன்றி மறைந்தன. சுவடியடிகளைக் கேட்காமல், எதையும் செய்யக்கூடாது என்ற எண்ணத்தோடு மௌனமாக இருந்தான்.

அறிவொளியடிகளோடும் சங்கம்மாளோடும் பேசிவிட்டு அன்றிரவு புத்தவிகாரத்திற்குத் திரும்ப, குலசேகரனுக்குச் சிறிது நேரமாகிவிட்டது.

தமயந்தியைப்பற்றி அஞ்சலையிடம் கூறி எச்சரிக்கலாமா, கூடாதா என்று சுவடியடிகளிடம் கேட்க அவன்எண்ணினான். ஆனால் அவர் எங்கே காணோம்? எங்கேயாகிலும் வெளியே சென்றிருக்கிறாரோ என்று, வழக்கமாகப்படுக்குமிடத்தில் அவன் படுத்துக் கொண்டான்.

இரவு நடுநிசி கடந்தும் அடிகள் வரவில்லை. குலசேகரனுக்கோ தூக்கம் வரவில்லை. அடிகள் எங்கே சென்றிருப்பார்? ஏன் இவ்வளவு நேரமாகியும் திரும்பவில்லை? என்ற எண்ணம், அவனுக்கு ஏதோ ஒரு வித அச்சத்தை உண்டாக்கியது.

பொழுது புலர்ந்தது. ஆனால் அடிகள் திரும்பி வரவில்லை. குலசேகரனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

“என்னைத் தனியாக விட்டுவிட்டு அடிகள் எங்கும் செல்லமாட்டாரே?” என்ற சிந்தனையோடு, புத்த விகாரத்தின் எதிரே இருந்த ஓர் ஆலமரத்தின் அடியில்உட்கார்ந்திருந்த குலசேகரனை நாடி, அரசாங்க சேகவன் ஒருவன் வந்தான்.

வந்த சேவகன் வணக்கம் கூறிவிட்டு, “தங்கள் பெயர்தானே—பூஞ்சோலை?” என்று அடக்கவொடுக்கத்தோடு கேட்டான்.

“ஆமாம்! என்ன செய்தி?”

“இதோ!” என்று சொல்லி ஒரு ஓலையை அச்சேவகன் தந்தான்.

குலசேகரன் அதைப் பிரித்துப் படித்துப் பார்த்தான்.

“பூஞ்சோலைக்கு,

முதல் நாள் அன்று புத்த விகாரத்தில் உம் பேச்சைக் கேட்டது முதல், உம்மைத் தனியாகச் சந்தித்துப் பேசவேண்டுமென்ற ஆசை எனக்கு. ஆகவே இன்று மாலை, என்னை அரண்மனையில் வந்து பார்க்கும்படிக் கேட்டுக்கொள்கி

றேன். பாண்டி நாட்டில் பௌத்தத்தை எப்படிப் பரப்புவது என்ற வழிமுறைகளைப் பற்றித் தனியாகப் பேசவேண்டுமென்ற ஆவல்.

இப்படிக்கு,

பராக்கிரமபாகு.

ஓலையைப் படித்து முடித்ததும், சேவகனை நிமிர்ந்து பார்த்து, "நான் தவறாமல் மாலை வருகிறேன் என்று அரசரிடம் போய்ச் சொல்!' என்று கூறினான்.

சேவகன் சென்று விட்ட பிறகு அந்த ஓலையை அவன் திரும்பவும் படித்துப் பார்த்தான்.

"யார் எனது எதிரியோ, அவனே எனக்கு ஓலை அனுப்பியிருக்கிறான்! எவன் குலசேகரனின் தலையை வெட்டியெடுத்துச் சென்று, இலங்கைக் கோட்டைச் சுவரின்மீது வைப்பேன் என்று கொக்கரித்துக் கொண்டிருக்கிறானோ, அவனே அதே குலசேகரனுக்கு அழைப்பு விடுக்கிறான்! விசித்திரம்!' என்று அவன் சிரித்தான்.

அந்த ஓலையில் ஏதாகிலும்சூழ்ச்சியிருக்குமோ என்ற சந்தேகம் அவனுக்கு உண்டாகவில்லை! காரணம், இலங்கை அரசனின் நிலைமை அவனுக்கு நன்றாகத் தெரியும்!

பராக்கிரமபாகு எவ்வளவோ மகிழ்ச்சியோடுதான், சேர நாட்டிற்கு வந்தான், தமிழ் நிலத்தில், குறிப்பாகப் பாண்டிய நாட்டிலுள்ள பௌத்தர்களின் ஆதரவு தனக்குக் கிடைக்கும்—அந்த ஆதரவையும் தன் படை பலத்தையும் கொண்டு பாண்டிய நாட்டை அடிமைப்படுத்திவிடலாம், குலசேகரனைக் கைது செய்து இலங்கைக்கு அழைத்துச் சென்று, அவமானப்படுத்தி, கடைசியில் அவன் தலையை வெட்டிக் கோட்டைச் சுவரின்மீது வைக்கலாம் என்ற நம்பிக்கையே, அந்த மகிழ்ச்சிக்கான காரணமாகும்.

ஆனால் இங்கு வந்த பிறகு, அறிவொளியடிகள் போன்ற சில பௌத்தத் துறவிகள், போர் என்றால் கூடாது என்று மறுப்புக் கூறத் தொடங்கிவிட்டனர். அந்த மறுப்பு நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே சென்றது. அதனால் மனக் கவலையடைந்த பராக்கிரமபாகு, தனித் தனியாக ஆட்களைப் பார்த்து, தன் திட்டத்திற்கு ஆதரவு தேட ஆரம்பித்தான். தமிழ் நாட்டிலுள்ள பௌத்தர்களைப் பகைத்துக் கொண்டு, எவ்வளவுதான் படைபலம் இருந்தபோதிலும், வெற்றியடைவது முடியாத காரியம் என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். சென்ற முறை குலசேகரனோடு தொடுத்த போரில், அந்த உண்மையை அவன் அறிந்தான். எனவேதான், அவன் பௌத்தர்களின் ஆதரவு கிடைக்காவிட்டாலும், விரோதம் இல்லாமல் இருந்தால் போதும்என்று எண்ணினான். ஆகவே தனித் தனியாகப் பௌத்தர்களை அழைத்து, குலசேகரனை அடக்கினால்தான் பௌத்தம் வளரும் என்ற கருத்தை நயமாகக் கூற ஆரம்பித்தான்.

இவ்வளவும் குலசேகரனுக்குத் தெரியும். எனவேதான் சேவகனிடம் கொஞ்சங்கூட யோசிக்காமல், அன்று மாலை சந்திப்பதாகச் சொல்லியனுப்பினான்.

இன்று மாலை அரண்மனைக்குப் போகப்போகிறோம் — எதிரியிடம் பேசி ஏமாற்றப்போகிறோம்—ஒருவேளை திருமேனியைச் சந்தித்தாலும் சந்திப்போம்-என்ற நினைப்பு, சுவடியடிகளைப்பற்றிய கவனத்தைக் கொஞ்சம் மறக்கடித்துவிட்டது எனலாம்.

அன்று மாலை அவனை அழைத்து வரும்படி, இலங்கை அரசன் பல்லக்கு அனுப்பியிருந்தான்.

அரண்மனையினுள் நுழைந்ததும் குலசேகரனுக்குப் பலமான உபசாரங்கள் நடைபெற்றன. அவற்றையெல்லாம் கண்டு அவன் மனதிற்குள்ளாகவே சிரித்துக்கொண்டான்.

நம்முடைய மாறுவேடம் எத்தனைப்பேரை எப்படியெல்லாம் ஏமாற்றுகிறது?' என்று நினைத்து, அவன் தன் முதுகிலே தானே தட்டிக் கொடுத்துக்கொண்டான்.

அஞ்சலையைப்போல — தமயந்தியைப்போல — வேறு யாராகிலும் என்னை அடையாளம் தெரிந்து கொண்டு, அதைப் பராக்கிரமபாகுவிடம் கூறிவிட்டிருந்தால்? இப்படிக் குலசேகரனின் மனதில் உண்டான ஓர் சந்தேகம், அவன் உடலைச் சிலிர்க்கச் செய்தது.

அரண்மனையினுள் வந்துவிட்டோம், இனி அதைப்பற்றியெல்லாம் யோசித்து என்ன பயன் என்ற முடிவோடு பராக்கிரமபாகு இருந்த அறையினுள் நுழைந்தான்.

"பூஞ்சோலை, வாப்பா வா!" என்று கட்டிலில் சாய்ந்திருந்த பராக்கிரமபாகு, நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"வணக்கம் அரசே!" என்று இரு கைகளையும் குவித்துக் குலசேகரன் தலை தாழ்த்தினான்.

"வாழ்க! உட்கார், பூஞ்சோலை!" என்று அன்பு ததும்புங் குரலில் பராக்கிரமபாகு கூறினான்.

குலசேகரன் அந்த அறையிலிருந்த புத்தர் சிலையைப் பார்த்தபடி ஆசனத்தில் உட்கார்ந்தான்.

'பூஞ்சோலை, முதல்நாள் புத்த விகாரத்தில் நீர் பேசிய வார்த்தைகள் இன்னமும் என் காதில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. பௌத்தத் துறவிகள் ஏராளமாகக் கற்றவர்களாக இருக்கலாம்! விஷய ஞானம் நிரம்பப் பெற்றிருக்கலாம்! ஆனால் அவர்களால் பௌத்த மதத்தைப் பரப்பிவிட முடியுமென்று நம்ப வரலாற்றில் ஆதாரம் கிடையாது! அரசர்களாலும் உம்மைப் போன்ற வீர இளைஞர்களாலுமே பௌத்தம் வளர்ந்திருக்கிறது! அதற்கான சான்றுகள் பலப்பல, வரலாற்று ஏடுகளில் காணக் கிடக்கின்றன! இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்பதை உன்னால் யூகித்துக்கொள்ள முடியும்! குலசேகரன் யார்? என் எதிரியா? இல்லை! பௌத்தத்தின் எதிரி! பௌத்தர்கள் அவன் ஆட்சியில் எப்படி செல்வாக்கு இழந்திருக்கிறார்கள் என்பது, உம்மைப் போன்ற பாண்டிநாட்டு வாசிகளுக்குத்தான் தெரியும்! குலசேகரன் உமது நண்பர் என்று கூறினீர்! அந்த நண்பரை எதிர்த்து அழிக்க வேண்டும் என்றும் பேசினீர்! உம்மை அப்படிப் பேசத் தூண்டியது எது? குலசேகரன் மீது


**செங்குட்டுவன் கலைக்குழுவின்**

**மூவேந்தர் கால முதல் முன்னேற்றக் கழகம் வரை**

என்ற கலை நிகழ்ச்சி நடத்த விரும்புவோர்,

தொடர்புகொள்க:


**பூவை. செங்குட்டுவன்**

**16. பாரதியார் தெரு, சென்னை-18**

உமக்கு ஏதாகிலும் தனிப்பட்ட விரோதமா? இல்லை என்று நீரே கூறினீர்! ஆனால் அவனை எதிர்க்க வேண்டும் — அழிக்கவேண்டும் — என்ற எண்ணத்தை உமக்கு எது தந்தது? பௌத்தம் வளரவேண்டும் என்ற நல்லெண்ணந்தானே?' என்ற கேள்வியோடு பேச்சை நிறுத்திவிட்டு, பராக்கிரமபாகு குலசேகரனின் முகத்தைப் பார்த்தான்.

'ஆமாம்!' என்று புன்னகையோடு குலசேகரன் பதிலளித்தான்.

"திருநெல்வேலியைவிட்டு நீர் ஏன் இங்கு வந்திருக்கிறீர்? இலங்கையைவிட்டு நான் ஏன் இங்கு வந்திருக்கிறேன்? குலசேகரனை வீழ்த்தினால் அதனால் தனிப்பட்ட முறையில் உமக்கு ஏதாகிலும் லாபம் இருக்கிறதா? மதுரை மீது படையெடுத்து வென்றால், நான் என்ன இலங்கையை விட்டுவிட்டு மதுரையின் சிம்மாசனத்தில் வந்து உட்கார்ந்துவிடப் போகிறேனா? இல்லை! ஆனால் ஏன் இங்கு வந்து குழுமியிருக்கிறோம்! பௌத்தத்தின் வளர்ச்சிக்குப் பாண்டிய நாட்டில் என்னசெய்யவேண்டும் என்பதைப் பற்றி யோசித்து, அந்த முறையிலே செயலாற்றவே இங்கு வந்து கூடினோம்! உம்மைப்போன்ற துடிப்புள்ள வாலிபர்கள், எதிரி நாட்டின்மீது படையெடுக்க வேண்டும் என்கிறார்கள்! சில வயதான துறவிகளோ, படையெடுத்தால் உயிர்வதை உண்டாகும் — ஆகவே போர் கூடாது என்று மறுக்கிறார்கள்! இராசாதிராச சோழன் எப்படி சைவத்தைப் பரப்புகிறான்? சமயவாதிகளை அனுப்பி ஆங்காங்கே பிரசாரம் செய்தா? சைவத்திற்கு எதிரியாக இருக்கிறான் — சைவத்தை அழிக்க வேலை செய்கிறான் — என்று தெரிந்தால், உடனே படையெடுக்கிறான்! அப்படி அவன் படையெடுக்கும்போது சைவப்பெரியார்கள் 'அன்பேசிவம்! ஆகவே இரத்தம் சிந்தும் போர் வேண்டாம்!' என்று அவன் குறுக்கே விழுந்து தடுக்கிறார்களா! இல்லையே! மாறாக ஆசி கூறியல்லவா அனுப்புகிறார்கள்! இதையெல்லாம் நமது துறவிகளில் சிலரால் புரிந்துகொள்ள முடியவில்லை! ஆகவே போர் என்றால் புத்தருக்கு ஏதோ துரோகம் செய்து விடுவதைப்போல நடுங்குகிறார்கள்!....." இப்படி இலங்கை அரசன் பேசிக்கொண்டிருந்தபோது, அவனுக்குப் பின்னாலிருந்த திரை அசைந்ததை, குலசேகரன் கவனித்தான்.



அந்தத் திரையை விலக்கிக் கொண்டு திருமேனி எட்டிப் பார்த்தாள். அவளைக் கண்டதும், குலசேகரனின் முகம்மலர்ந்தது. இலங்கை அரசனின் பேச்சால் தலைநோய் கண்டுவிட்டிருந்த அவனுக்கு, திருமேனியின் கண்கள் தலைநோயைப் போக்கியது மட்டுமல்ல, தாங்கொணா களிப்பையும் தந்தது.

அவனது முகமாற்றத்தைக் கண்டதும், பராக்கிரமமாகு தன் பேச்சை நிறுத்திவிட்டான்.

"ஏன் பூஞ்சோலை, உம் முகம் ஒருவிதமாக மாறிவிட்டது?" என்று சந்தேகம் நிறைந்த குரலில் அவன் கேட்டான்.

"ஒன்றுமில்லையே!"

"இல்லை நீர் மறைக்கிறீர்!"

"நேற்றிரவு அறிவொளியடிகள் என்னோடு பேசிக்கொண்டிருந்தார்! அவர் பேச்சையும், தங்கள் பேச்சையும் ஒப்பிட்டுப் பார்த்தேன்! அப்படிப் பார்த்ததில் என் மனத்தில் ஒருவித மகிழ்ச்சி பொங்க ஆரம்பித்து விட்டது!"

"அறிவொளி யடிகளின் அபிப்பிராயம் உமக்குப் பிடித்திருக்கிறதா?"

"என் உடலில் ஓடுவது கிழ இரத்தமல்லவே — வாலிப இரத்தமாயிற்றே -- எப்படிப் பிடிக்கும் அவர் பேச்சு?" என்று சிரித்துக் கொண்டே குலசேகரன் சொன்னான்.

இந்தப் புகழுரையைக் கேட்டதும்—மகுடியின் இசையைக் கேட்டு நாகம் படமெடுத்தாடுவதைப்போல —பராக்கிரமபாகு ஆனந்தத்தால் துள்ள ஆரம்பித்துவிட்டான்.

"பூஞ்சோலை! அந்தக் குலசேகரனை வீழ்த்த—ஒரு புதுத் திட்டம் தயாரித்திருக்கிறேன்!" என்று அரசன் கட்டிலில் சாய்ந்துகொண்டே கூறினான்.

"புதுத்திட்டமா? அது என்ன?" என்று ஆர்வத்தோடு குலசேகரன் கேட்டான்.

அவனது ஆர்வத்தை அறிந்த பராக்கிரம பாகு, பதில் கூறாமல் சிரித்தான்,

(வளரும்.)

# நீதி செத்துவிட்டது?

தமிழத்தாயே! தமிழத்தாயே!! தரங்கெட்டு, தன் மானமிழந்துவிட்ட இந்தத் தமிழகத்து ஆட்சியின் தருக்கு மனம்பற்றி எழுத கை கூசுகிறது அம்மா!

சீரிளமைத் திறங்கொண்ட நின் வீறுார்ந்த—செம்மாந்த திறன்பற்றி காவியத்தில், ஓவியத்தில் காட்சி வடிவில் கண்டு களித்துக் களித்துக் கவி பாடிப்பாடிப் பெருமை செய்து வந்தோமே!

எழிலார்ந்த நின்மேனியின் இளமைப் பொலிவுக்கு எத்துணை எத்துணை இலக்கியங்களைப் படைத்து எங்கள் இதயாஞ்சலியைக் காணிக்கை தந்திருக்கிறோம்!

கவினார்ந்த சோலைகளால், கமுகு பலா வாழைகளால், செந்நெல்லால், செங்கரும்பால் நின் சீரடி தன்னைச் செம்மையுறச் செழுமையுறச் செய்தோமே, அம்மா!!

ஆசனம் அமர்ந்து அகிலத்தையே ஆண்ட தமிழர் தம் தாயே! யாதும் ஊரே! யாவரும் கேளிர்! என்றெல்லாம் பொதுமை பேசி பூவுலகையே உன் பொற்கரங்களால் நீவிவிட்ட அந்த நாள் எங்கே தாயே!

யாவரும் கேளிராகவே இருக்கட்டும் என்றுதானே இதுநாள் வரையில் இந்த நாட்டார், இந்தி நாட்டாரால் இழிந்த நிலைக்கு இழுத்துச் செல்லப்பட்டபோதும், இன்முகம் காட்டி இருந்துவந்தனர்.

இந்தி நாட்டார் இடும் பிச்சைக்கு இங்குள்ள சிலர், தாள்தொட்டு மடி நீட்டி, தமிழர்களையே காட்டிக் கொடுக்கும் கயமையினைச் செய்து வந்துள்ள போதும், அன்னையே! நின் பால் பருகி, நின் மடியமர்ந்து, நின் மொழி கேட்டு, நீயாகியதனால்தானே தாயே, நாங்கள் அவர்களும் வாழட்டும் என்றிருந்தோம்!

நினக்குரிய அரியாசனத்தை நிலமாள வந்தோர், தனக்காக்கிக் கொண்டதாலேயே, அவர்களது அடாத கொடுங்கோன்மை அளவிடற் கரிதாகிக் கொண்டிருக்கிறது அன்னையே!

நின்மொழிக்கு—சிருங்காரப் பண்ணைக்கு—செந்தமிழ்க் காவியத்துக்கு, சீர் தாருங்கள்—சிறப்பளியுங்கள்—அரியணை அமர்த்துங்கள் என்று இந்த நாடாளும் நாயகர்களைக் கேட்டபோது ஈவு இரக்கமின்றி மிருகங்களை வேட்டையாடுதல்போல சுட்டுப் பொசுக்கி அந்த நிண நாற்றத்தில் மந்த மாருத சுகம் பெற்ற அந்த மதோன்மத்தர்கள்—

சாப்பிடாதே என்றார்கள்.

இங்குள்ளவர், குறைவயிறும் கொளமுடியாதோராய் கும்பியின் கொடுமைக்குக் குமைந்து கொண்டிருக்கிறார்கள்.

வேலையில்லை.

உறையுள் இல்லை.

வேதனை தீர்க்கும் எந்த வழியுமே இல்லை

என்ற இழிநிலைக்கு இந்தத் தாரணியை ஆளாக்கி விட்ட பின்னரும்

மாலைசூடி இருக்கிறோம்

மணங் கமழச் செய்திருக்கிறோம்

என்றெல்லாம் பச்சைப் பொய்ப் பேசி பாமர மக்களைப் படுகுழியில் தள்ளிவிட்டு,

ஏழையர்—இடும்பைகூர் வயிறுடையார்—இட்ட வரிப் பிச்சைகளைப் பெற்று தம் வயிற்றை நிரப்பிக் கொண்டு

நானே நாயகன்!

நாவசைவே சட்டங்கள்!!

என்று இறுமாந்தமர்ந்து கொண்டு புரிகின்ற இழிச் செயல்களை யெல்லாம் எப்படியம்மா எடுத்துரைப்பேன்?

கொலு அமர்ந்த கொடியவர்கள் புரிந்த கொடுமைகளை யெல்லாம் பொறுத்துக் கொண்டோம்.

தவறுகளையும், தீமைகளையும் 'நிர்வாகக் குறைபாடு' என்ற போர்வைக்குள் போட்டு மூடி, புரையோடவிட்டு 'அறுவைச் சிகிச்சை'க்கும் நாட்டை ஆளாக்கிவிட்டார்கள். அதனையும்கூட உள்ளப் புழுக்கத்தோடு பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அன்னையே! அக்கிரமங்களின் எல்லை அகன்று கொண்டிருக்கிறது! 'சர்வாதிகாரம்' 'எதேச்சாதிகாரம்' என்றெல்லாம் கூறுகிறோமெனக் கேட்டு கொக்கரிக்கக் கிளம்பும் அந்த ஜனநாயகக் கொலைபாதகர்கள்—

இப்போது புதிதாகப் புரிந்துவிட்ட படுகொலையைப்பற்றி எப்படியம்மா உனக்குக் கூறுவேன்.

விலா புடைக்கத் தின்று, திண்டு சுகம் பெற்றிருக்கும் 'காங்கிரஸ்' ஆளவந்தாரைத் தவிர,

தாயே! நின் தளிர்க்கரங்களின் தழுவலுக்கு நாம் தகுதியற்றவர்கள்! நின் புறமுறுவல் பெற்று பூரிப்புப் பெறும் திறனற்றவர்கள்!! — என்றெல்லாம் இயம்புவது மட்டுமல்ல, அம்மா...இழிச் செயலின் 'எடுத்துக் காட்டு' என எடுத்துக் காட்டத் தலைப்பட்டு விட்டார்கள் தாயே!

அன்னையே! நிமிர்ந்து நின்ற நின் அகன்ற அணி பூண்ட மார்பிலே — திருநெல்வேலியிலே — பூச்சரம் சூடி பூரிப்படைந்தோம்!

"கழுகுக் குணம் கொண்டவர்கள் எங்களுக்குத் தேவையில்லை. கழகத்தார்தான் தேவை" யென அங்குள்ள மக்கள் வழங்கிய 'தீர்ப்பு' கேட்டு அந்த தீயவர்கள் நாள்தோறும் உளத்துள்ளே தீய்ந்து வந்திருக்கிறார்கள் அம்மா!

தீய்ந்த அந்த இதயத்தை திருநெல்வேலிச் சீமையிலே காட்டிவிட்டார்கள் தாயே!

காரணம் என்ன தெரியுமா! அம்மா! 'கோஷ்டிப் பூசல்' அதிகமாகிவிட்டதாம்!

உனக்குத் தெரியுமா தாயே, திருச்சி நகரமன்றத்தின் இழிநிலைபற்றி. கோஷ்டிப்பூசலும், கொடுமைத் தன்மையும் அங்கே எந்த அளவுக்கு அதிகரித்திருக்கிறது என்று?

ஊழல் காரணமாக அந்த நகரமன்ற உறுப்பினர்கள் சிலர் 'சர்சார்ஜ்' விதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு லட்சம் ரூபாய்வரைக்கும்!

தூத்துக்குடி நகரமன்றத்தின் நிகழ்ச்சிகளே நடைபெற முடியாத அளவுக்கு, கூட்டத்தைக் கூட்டி நடைபெறாமல் கலைத்துவிட்டுச்செல்லும் அளவுக்கு அங்கே 'கோஷ்டிப் பூசல்' தலைவிரித்தாடிக்கொண்டிருக்கிறது.

மதுரை மாநகரத்து மன்றத்தின்மீது நம்பிக்கையே இல்லையெனப் பன்முறை கூறி கூறிச் சலித்துவிட்ட பின்னரும் அதுபற்றிக் கேளாக் காதுடன் கெக்கலி கொட்டுகின்றனர்.

பாளையங்கோட்டை நிருவாக நாற்றம் சுவாசத்தையே கெடுக்கிறது.

ஆனால் 'கழகத்தாரின் நகரமன்ற ஆட்சி' என்ற ஒரே காரணத்தால் — அரசியல் காரணத்தால்—நாடாளத் தக்கவர்கள் — நாடாளப் பிறந்தவர்கள் தாங்கள் தான்; காங்கிரசுக்கு மட்டுமே அந்தப்பட்டயம் என்ற அற்ப ஆசை காரணமாக—

நெல்லை நகரமன்றம் கலைக்கப்பட்டுவிட்டதாம்! சே! சே! அருப்புக்கோட்டை நகரமன்றத்தைக் கலைக்க ஆணையிட்டபோதே, அறிவாளர்கள் கண்டித்தார்கள்.

ஆனால் அம்மா! அநீதியின் அகன்ற தடத்தை அழிக்க முடியாது—உன் மக்கள் கண்ணீரும் கம்பலையுமாகக் கதறுகிறார்கள் தாயே!

முதலில் அருப்புக்கோட்டை — காங்கிரசல்லாத நிர்வாகம்—கலைக்கப்பட்டது.

இப்போது நெல்லை—கழக ஆட்சியென்பதால்—கலைக்கப்பட்டது.

அடுத்து?

நீதி செத்துக் கொண்டிருக்கிறது.

ஜனநாயகக் கொலையாளிகளிடமிருந்து நாட்டைக் காப்பாற்றம்மா! வருகிற பொதுத்தேர்தலிலாவது இந்தப் புல்லன்மையைப் பொசுக்குகின்ற நல்லெண்ணத்தை இந்த நாட்டவருக்குத்தா! தாயே!!

திருவாரூர். முத்துராமன்.

# அட மனிதா, இது தகுமா?



ஆயிரத்து முந்நூறு முப்பது அருங் குறட்பாக்கள் தந்த அறநெறிச் செல்வனுக்கு-அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறளைத்தந்த கோமகனுக்கு--வள்ளுவருக்கு, சிங்காரச் சென்னை நகரம் விழா எடுத்தது! மயிலையில் சிலை அமைத்தது! அந்தச் சிலையைத் திறந்துவைக்க டில்லிப் பெருநகரிலிருந்து குடியரசுத் தலைவர் வந்தார்--வள்ளுவருக்குப் புகழ்மாலை சூடினார்?

தூய நெஞ்சங்கள் எல்லாம் இந்தக் காட்சியைக் கண்டன--வாயார வாழ்த்தின!

**ஆனால் ஒரே ஒரு அழுக்கு நெஞ்சம், 'இந்தக் காட்சியை மற்ற பிற மாநில மக்கள் பார்த்துவிடக் கூடாது' என்று சூழ்ச்சி செய்தது!**

அதன் விளைவுதான், சென்னையில் குடியரசுத் தலைவர் இராதாகிருஷ்ணன் திருவள்ளுவர் சிலை திறப்புவிழாச் செய்ததை, சினிமாவில் காட்டப்படும் 'இந்தியன் நியூஸ் ரெவியூ'வில் காட்டாமல் விட்ட கொடுஞ்செயல்!

இந்த வள்ளுவர் நினைவாகத்தான் தமிழக அரசாங்கமே ஒருநாள் விடுமுறைவிட்டது!

சென்னைக்கு இராதாகிருஷ்ணன் வருகை தந்ததையே பிலிம் டிவிஷன் படம் எடுத்திருக்கிறார்கள்!

இராதாகிருஷ்ணன் சென்னை வருகிறார்-படம் காட்டுகிறது!

திருமூர்த்தியின் படத்தைத் திறக்கிறார்--அதனை சினிமாப்படம் காட்டுகிறது!

வள்ளுவர் சிலை திறப்பு விழாவை மட்டும் அந்தப்படம் காட்ட மறுக்கிறது.

**'இது ஏன், ஏன்?'—இந்தக் கேள்வியில் வேகம் ஏறுவதற்குமுன் ஆட்சியாளர், விவேகத்துடன் தங்கள் நடவடிக்கையைத் திருத்திக்கொள்ள முன்வரட்டும்'**

**திருவள்ளுவர் சிலை திறப்புவிழா காட்டப்படாததற்குக் காரணம், 'தி. மு. கழகத்தின் மாநகராட்சி விழா எடுத்ததே' என்ற குறுகிய நோக்கமா?**

**சினிமாப்படத்தில், 'கழகத்தின் மேயர் மோசசும் துணைமேயர் சடகோபனும் தெரிந்துவிடுவார்கள்' என்ற அற்பக் காரணமா?**

**இவையெல்லாம் இல்லை என்றால், நிச்சயம், வள்ளுவரை அவமதித்த குற்றத்துக்கு ஆட்சியாளர்கள் பதில் சொல்லியாகவேண்டும்.**

**வள்ளுவரை அவமதிப்பது, தமிழகத்தை அவமதிப்பதற்கு ஒப்பாகும்—தாய்த் தமிழை அவமதிப்பதற்கு ஒப்பாகும்!**

**வள்ளுவர் நினைவுநாளுக்கு விடுமுறை தந்ததன் மூலம், வள்ளுவன்புகழை உணர்ந்துள்ளதை வெளிக்காட்டிய பக்தவத்சலனார், தமிழர்களின் கொதிப்பை வடக்கேயுள்ளவர்களுக்கு உணர்த்தி இந்தப் பெரும் குற்றத்துக்குரிய பிராயச்சித்தத்தை செய்யத் தூண்டவேண்டும்!**

**அவர் தமது கடமையைச் செய்யத் தவறுவாரானால்; தமிழ் கூறும் நல்லுலகம் குற்றவாளிகளுக்குரிய நீதியைக் கூறியே தீரும்!**

சின்ன காஞ்சீபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் .சி. என் அண்ணாதுரை.